# மாவட்ட ஆட்சியரின் அலுவலகம், காஞ்சிபுரம்

## பத்திரிக்கை செய்தி

அண்மைக் காலங்களில் இருசக்கர வாகனம் ஓட்டுநர்களால் அதிக எண்ணிக்கையில் விபத்து நடைபெறுகிறது என அனைவராலும் அறியப்படுகிறது. தமிழ் நாட்டில் **2017-ஆம்** ஆண்டு சனவரி முதல் அக்டோபர் வரையிலான காலத்தில் **21,431** இரு சக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பின்னால் அமர்ந்து செல்பவர்கள் விபத்துக்குள்ளாகி அதில் **4,730** பேர் உயிரை இழந்திருக்கின்றனர். இவ்வாறு இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பின்னால் அமர்ந்து செல்பவர்கள் மூலம் ஏற்படும் விபத்து மற்றும் உயிரிழப்பினை குறைக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கையினை எடுத்து வருகிறது.

அசல் ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பதும் மற்றும் சாலைவிதிகளை நன்கு அறிந்து வாகனத்தை ஓட்டுவதும் ஒரு ஓட்டுநரின் தலையாய பொறுப்பாகும். ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்குவது சட்டப்படி குற்றமாகும். இவ்வாறான விபத்துக்களை குறைக்க சாலை பாதுகாப்பு ஆணையர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, காஞ்சிபுரம் மாவட்டத்தில் போக்குவரத்துத்துறையின் துணையோடு அனைத்து இரு சக்கர வாகனம் விற்பனை நிலையங்களிலும் **“சாலைப் பாதுகாப்பு மையங்கள்”** உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சாலைப் பாதுகாப்பு மையங்களில் சாலை பாதுகாப்பு குறித்து வீடியோ, ஆடியோ மற்றும் சாலை பாதுகாப்பு

வாசகங்கள் அடங்கிய சிறு குறிப்புகள் தரப்படும் மற்றும் சாலை விபத்தினை தவிர்க்க ஆலோசனைகள் அளிக்கப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் இந்த சாலைப் பாதுகாப்பு மையங்களின் மூலமாக புதியதாக இரு சக்கர வாகனம் வாங்குபவர்களுக்கு சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு ஐம்பது சாலைப் பாதுகாப்பு மையங்கள் தொடங்கப்பட்டுள்ளது. அனைத்து இருசக்கர வாகன ஓட்டிகளும் மற்றும் பின்னால் அமர்ந்து செல்பவர்களும் கட்டாயமாக தலைக்கவசம் அணிந்தும், மற்றும் சாலை விதிகளை நன்கு உணர்ந்தும் வாகனத்தை இயக்கினால் இருசக்கர வாகன ஓட்டிகளால் ஏற்படும் பெரும்பாலான விபத்துகள் குறையும்.